# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
## வழக்கு எண்: CC – 244 /2023

**வழக்கு சாட்சி :PW2(LW3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னதுரை | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | கருப்பையா | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | மங்களப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | இலுப்பூர் | வயது | : | 45 |

1,2 எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 04th day of March 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மங்களப்பட்டியில் குடியிருந்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 25.09.2023 அன்று அ.சா. 1க்கும், எதிரிகளுக்கு நடந்த தகராறு சம்மந்தாக அ.சா. 1ன் இடத்திற்கு வந்து போலிசார் விசாரணை செய்து வரைபடம் வரைந்த போது நான் சாட்சியாக உடன்இருந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ 2 /PW2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எ.த.கு.வி</u>

1. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் கையெழுத்து மட்டும் போடுவேன். புகார்தாரர் முத்துகருப்பையா எனது சொந்தக்காரரா என்றால் நெருங்கிய சொந்தமில்லை, உறவுக்காரர் ஆவார். எதிரிக்கு எதிராக புகார் கொடுத்த முததுகருப்பையாவின் இடம் எனது இடத்திற்கு அருகில் உள்ளதா என்றால் இல்லை. ஆட்டுக் கொட்டகையின் உயரம் எவ்வளவு இருககும் என்றால் தெரியாது. கேணிக்கு அருகில் ஆடடுக்கொட்டகைஉள்ளதா என்ற விவரம்தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் என்னை விசாரித்த போது நான் ஆட்டுக்கொட்டகைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். முத்துக்கருப்பையா புகார் கொடுக்க வரும் போது நானும் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. வரைபடத்தில் ஆட்டுகொட்டகை போட்டார்களா, இல்லையா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது, போலிசார் கையொப்பம் செய்ய சொன்னார்கள் கையொப்பம் போட்டேன். பார்வை மகஜரில் என்ன

எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும் அதை என்னிடம் படித்து காட்டவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கில் போலிசார் என்னையும் ஒரு சாட்சியாக இருக்க சொல்லி கேட்டுக் கொண்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு குறித்தும், பார்வை மகஜர் தயார் செய்தது குறித்தும் எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும், அ.சா.1 எனது உறவினர் என்பதாலும் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.